கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

10 JUN 2013
EASTERN UNIVERSITY, SRI

இரண்டாம் வருட/முதலாம் அரையாண்டு பொதுக் கலைமாணித் தேர்வு - 2010/2011 (ஜனவரி/பெப்ரவரி 2013)

# ECO 2101 Advanced Economic Theory

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

01.(அ) மொத்தப்பயன், எல்லைப்பயன் என்பவற்றை வேறுபடுத்திக் காட்டுக.

(06 புள்ளிகள்)

(ஆ) நுகர்வோன்சமநிலையை அடைய அல்பிரட் மாசலினால் விதந்துரைக்கப்பட்ட நிபந்தனைகளை விளக்குக.

(04 புள்ளிகள்)

(இ) நுகர்வோன் ஒருவன் கொள்வனவு செய்கின்ற x,y என்கின்ற இரு வேறுபட்ட பொருட்களினது மொத்தப்பயன்சார்பு பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

$$Tu = 4x^2 y^2$$

x பொருளுக்கான விலை 4 ரூபாவாகும். y பொருளுக்கான விலை 4 ரூபாவாகும். நுகர்வோன் வருமானம் 200 ரூபாவாகும். இத்தரவிலிருந்து பின்வருவனவற்றைக் காண்க.

(i) தனது செலவிடக்கூடிய முழுவருமானத்தையும் x,y ஆகிய பொருட்களின் கொள்வனவில் செலவிடுவான்எனின் உச்சப்பயனை பெறும் நிலையில் நுகர்வோனின் இரு பொருட்களினதும் கொள்வனவு சேர்க்கை என்ன.

(06 புள்ளிகள்)

(ii) x என்னும் பண்டத்தின் விலையானது 2 ரூபாவால் குறைவடையும் எனின் y யினது விலை மாறாதபோது உச்சப்பயனுக்கான புதிய கொள்வனவு சேர்க்கை என்ன?

(05 புள்ளிகள்)

(iii) x பொருளுக்கான கேள்விக்கோட்டினை வரைக.

(04 புள்ளிகள்)
(மொத்த 25 புள்ளிகள்)

02.(அ) குறுங்காலஉற்பத்தி தொழிற்பாட்டின் வரைபடத்தின் உதவியுடன் விளக்குக.

(06 புள்ளிகள்)

(ஆ) உற்பத்திக் கோட்பாட்டினை விளக்கும் விதிகளைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

(இ) 'உற்பத்தி விரிவுப் பாதை' என்றால் என்ன? விளக்குக.

(04 புள்ளிகள்)

(ஈ) பின்வரும் ஒவ்வொரு உற்பத்திச் சார்பும் எவ்வகையான அளவுத்திட்ட விளைவு விதியினை உடையது எனக் காட்டுக.

(i) $Q = 20k^{0.6}L^{0.5}$

(ii) $Q = 10xy - 2x^2 - y^2$

(iii) $Q = 2k + 3L$

(06 புள்ளிகள்)

(உ) $Q = AL^{\propto}\ k^{\beta}$ எனும் கொப்டக்ளஸ் உற்பத்திச் சார்பிலிருந்து $MP_L$, $MP_k$ யினைக் கணிப்பிடுக.

(05 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

03.(அ) நிலையானசெலவு, மாறும்செலவு என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டினை உதாரணத்துடன் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

(ஆ) நீண்டகாலத்தில் நிறுவனத்தின் உற்பத்திச் சமநிலை எவ்வாறு தீர்மானிக்கப்படுகின்றது என்பதை விளக்குக.

(06 புள்ளிகள்)

(இ) நீண்டகால சராசரிசெலவுக் கோட்டின் வடிவத்தினை தீர்மானிக்கும் காரணிகளை விளக்குக.

(05 புள்ளிகள்)

(ஈ) ஒரு நிறுவனத்தின் குறுங்காலசெலவுத் தொழிற்பாடு பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

$TC = 1000 + 150x^3 + 200x^2$ இத் தொழிற்பாட்டிலிருந்து TFC, TVC, MC, AVC, AFC என்பவற்றைக் கணிப்பிடுக.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

04.(அ) நிறைபோட்டிச்சந்தை அமைப்பை சுருக்கமாக விளக்குக.

(06 புள்ளிகள்)

(ஆ) நிறைபோட்டி நிறுவனம் ஒன்றின் குறுங்கால சமநிலை, நீண்டகால சம நிலையிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது? விளக்குக.

(08 புள்ளிகள்)

(இ) தனியுரிமைச் சந்தை அமைப்பின் பிரதான அம்சங்களை விளக்குக.

(06 புள்ளிகள்)

(ஈ) தனியுரிமையில் விலைபேதப்படுத்தல் இடம்பெறத் தேவையான அடிப்படை நிபந்தனைகள் எவை? விளக்குக.

(05 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

05.(அ) சமபயன் வளையியின் பண்புகளை விளக்குக?

(05 புள்ளிகள்)

(ஆ) வருமானவிளைவு, பதிலீட்டுவிளைவு என்றால் என்ன?

(06 புள்ளிகள்)

(இ) அளவுசார்ஆய்வுக்கும், வரிசைசார்ஆய்வுக்கும் இடையிலான வேறுபாடுகள் யாவை?

(06 புள்ளிகள்)

(ஈ) விருப்பத்தெரிவுக் கோட்பாடு பற்றி விளக்குக.

(08 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

06. பின்வருவனவற்றிற்கு சிறுகுறிப்பெழுதுக.

(அ) உத்தம இயலளவு

(ஆ) எல்லை தொழிநுட்ப பதிலீட்டு வீதம்

(இ) விலை நெகிழ்ச்சி

(ஈ) பொருளாதார சிக்கனங்கள்

(உ) சராசரி உற்பத்தி

(5x5=25 புள்ளிகள்)

***